தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
--------------------
நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.43
--------------------
2006, டிசம்பர் 7, வியாழக்கிழமை
--------------------
கார்த்திகை 21, விய – திருவள்ளுவர் ஆண்டு – 2037
--------------------

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

"நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்."

(நல்ல முறையில் ஆளும் திறமை பெற்றவர், தான் பிறந்த குடிக்கே பெருமை சேர்ப்பவராவார்.)

1. வினாக்கள் – விடைகள்
--------------------

வரிசை எண்கள் 21 முதல் 30 வரை உள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டு விடையளிக்கப்பட்டன.

2. சிறப்புக் கவன ஈர்ப்புகள்
--------------------

(1) திருச்சி ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலையை சில சமூக விரோதிகள் உடைத்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து திரு. சி. ஞானசேகரன், அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

(2) தமிழகத்தில் சர்ச்சைக்குட்பட்ட மரபணு விதைகள் சோதனை முறையில் பயிரிட்டுள்ளதால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தார். இது குறித்து திரு. தி. வேல்முருகன் மற்றும் திரு. ஆர். ஞானதாஸ் ஆகியோரும் பேசினார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

3. பாராட்டுத் தீர்மானம்
--------------------

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகாட்சியேந்தல் ஆகிய பஞ்சாயத்துகளுக்கு தேர்தல் நடத்தி முடித்தது குறித்து திரு. கு. செல்வம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசினையும் பாராட்டி பேசி இது குறித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பெற வேண்டுமெனக் கோரினார்.

தீர்மானம்
------

"கடந்த பத்தாண்டுகளாக ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க இயலாதிருந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகாட்சியேந்தல் ஆகிய

பஞ்சாயத்துகளுக்கு சமத்துவ பெரியார், முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமது சாதூர்யத்தால் அனைத்து தரப்பு மக்களின் ஒத்துழைப்போடு தேர்தலை நடத்தி தலைவர்களையும் தேர்வு செய்து, தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை நிலைநாட்டி ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்தார். இவை பொன் எழுத்துக்களால் சட்டப்பேரவை வரலாற்றில் பொறிக்கப்படவேண்டும்"

என்னும் இப்பாராட்டுத் தீர்மானம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டு பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிட்டு இப்பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசுக்கு காலக்கெடு விதித்து, பேரவை தீர்மானம் இயற்ற வேண்டுமென்பது குறித்து திரு. ஜி.கே. மணி அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

திரு. டி. சுதர்சனம் மற்றும் திரு. கு. ஹசன் அலி ஆகியோர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

மேலும் அனைவருக்கும் பொதுவான கீழ்க்காணும் தீர்மானத்தை பேரவை ஒருமனதாக நிறைவேற்றியது.

> " இலங்கையிலே, தமிழ் மக்களின் உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை மேலும் மோசமான அளவில் தொடர்வதாக இந்தச் சட்டப்பேரவை ஆழ்ந்த வேதனையைத் தெரிவிப்பதோடு இதற்கு ஒரு முடிவினைக்காண இலங்கைத் தமிழர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று அமைதியாக வாழ்ந்திட இந்தியப் பேரரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது. "

5. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்களை நியமித்து, பள்ளிகளுக்குக் கழிப்பிடம் மற்றும் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து திரு. கோவை தங்கம் அவர்கள் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விவர அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளித்தார்.

6. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்

திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள் 2006-2007–ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் ஏழாவது முதல் பதினொன்றாவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(1) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(2) 2006–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(3) 2006–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(4) 2006–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக சட்டமுன்வடிவு

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

(1) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.42/2006)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு. சி. ஞானசேரகன் அவர்கள் விவாதத்தில் பங்கு கொண்டார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(2) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.43/2006)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

9. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.44/2006); 2006–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.45/2006); 2006-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.46/2006) மற்றும் 2006-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.47/2006) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(1) 2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.44/2006)

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(2) 2006–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.45/2006)

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு. டி. சுதர்சனம், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் மற்றும் திரு. என். நன்மாறன் ஆகியோர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

------

2006-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.46/2006) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(3) 2006-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.46/2006)

---

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 67 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 67 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

------

2006-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.47/2006) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(4) 2006-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.47/2006)

---

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 67 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 67 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**11.** அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை பேரவையில் அறிவித்தார்:—

கடந்த பத்தாண்டுகளாக ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க இயலாதிருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகாட்சியேந்தல் ஆகிய பஞ்சாயத்துகளுக்கு சமத்துவ பெரியார், முத்தமிழறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், அனைத்து தரப்பு மக்களின் ஒத்துழைப்போடு தேர்தலை நடத்தி தலைவர்களையும் தேர்வு செய்து தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை நிலைநாட்டி ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்தார்.

இதே போன்று நேற்றைய தினம் சாமானிய வழக்கறிஞரும் தன் தனித்திறமை வெளிப்பட தனது தாய்மொழி தமிழில் உயர்நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு வழிவகை செய்யும் சரித்திரப்புகழ் வாய்ந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நானும் ஒரு வழக்கறிஞன் என்ற முறையில் பாராட்டுதல்களை என் சார்பிலும், உறுப்பினர்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்வதோடு இவையனைத்தும் பொன் எழுத்துக்களால் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டும் என்பதை இந்த நல்ல தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற நற்பணிகளை தொடர்ந்து இடையறாது, இடைவிடாது, தளராது நாள்தோறும் ஆற்றிவரும் என் குடும்பத் தலைவரை இவ்வேளையில் வணங்குகிறேன். மேலும், அவை ஆரம்பிக்கும் நேரம் முதல் அவை முடியும் வரை அவையில் அமர்ந்து தேவையான விளக்கங்களையும், ஆழமான கருத்துக்களையும் அரசின் சார்பில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்ததோடு மட்டுமின்றி இன்றைய தினம் கேள்வி நேரத்தில் சுமார் **31** நிமிடங்கள் உறுப்பினர்களது வினாக்களுக்கு பதிலுரை வழங்கிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடந்த 4 நாட்கள் நடைபெற்ற பேரவைக் கூட்டம் சுமூகமாக நடைபெற உதவிய அமைச்சர்கள், உறுப்பினர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

12. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்

சட்டமன்றப் பேரவை விதி 25(1)–இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு முடிவுற்று பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

மா. செல்வராஜ்,<br>
செயலாளர்.